30th October 1957]

Suspension of students of the Raja's College, Thiruvaiar

* 39 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Tanjore District Board had suspended 58 students of the Raja's College, Thiruvaiar; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) The Government have no information and they have called for a report.

Old Assembly Buildings, Mount Road

* 40 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to dispose of the old Assembly Building in Government Estate, Mount Road?

THE HON. SRI P. KAKKAN : There is no proposal to dispose of the Assembly Buildings. The question of utilizing the office rooms, etc., for Government purposes is under consideration.

SRI N. K. PALANISAMI : கவர்ன்மெண்ட் எஸ்டேட்டிலுள்ள லைப்ரரியை இந்தக் கட்டிடத்திற்கு மாற்றி அங்கே வரக்கூடியவர்களை அனுமதிப்பதற்கு சர்க்கார் முயற்சி செய்யுமா ?

THE HON. SRI P. KAKKAN : இதற்கு தனிக் கேள்வி கேட்டால் பதில் சொல்கிறேன்.

SRI V. K. RAMASWAMY MUDALIAR : சில தினங்களுக்கு முன்பு, " அந்தக் கட்டிடத்தை மத்திய சர்க்காருக்கு குடக்கூலிக்குக் கொடுப்பதற்கு உத்தேசம் இருக்கிறது " என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால், அதை மத்திய சர்க்கார் ஆபீசுகளுக்கு நமது அரசாங்கத்தார் குடக்கூலிக்கு விடுவார்களா, அல்லது நமது அரசாங்க ஆபீஸ்களையே அங்கே வைப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : மத்திய சர்க்கார் ஒலிபரப்பு இலாகா மந்திரி ஸ்ரீ கேஸ்கர் அவர்கள் நமது பழைய அஸெம்பிளிக் கட்டிடத்தைக் கேட்டார்கள். அந்த கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டு, அவர்களுக்கு கொடுக்கவேண்டாம் என்று முடிவு செய்திருக்கிறோம்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Sir, is it a fact that the 9.50
Madras Local Library Authority has requested the Government to a.m.
place the old Assembly Buildings at its disposal and may I know whether the Hon. Minister for Public Works can give us any information about it?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் ஒரு தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இன்று சட்ட மன்றத்திலுள்ள உறுப்பினர்கள் எண்ணிக்கை அடுத்த தேர்தலில், மக்கள் தொகை அடிப்படையில் இதைவிட ஒன்றரை மடங்கு மிகுதியாகும் என்ற காரணத்தால், சென்னை மவுண்ட் ரோடில் உள்ள புதிய சட்ட மன்றக் கட்டிடத்தை யாரிடத்திலும் தத்தம் செய்துவிடாத முறையில் இன்னும் நான்கு ஆண்டுகள் வரை அதைப் பாதுகாப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : நிச்சயம் பாதுகாப்பார்கள் என்று சொல்லுகிறேன்.